**ஜூன் – 26**

# TNPSC துளிகள்

- 2025 ஆம் ஆண்டு FIH ஆடவர் இளையோர் உலகக் கோப்பைப் போட்டியினைத் தமிழ் நாட்டில் நடத்துவதற்காக ஹாக்கி இந்தியா (HI) மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டன.
- ஜஸ்பிரித் பும்ரா SENA நாடுகளில் (தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா) டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் வாசிம் அக்ரமை முந்தி 150 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் ஆசிய வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- சௌரா மகரேமி எழுதிய 'Woman! Life! Freedom!' என்ற ஈரானில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு எழுச்சியை ஆவணப்படுத்தியப் புத்தகம் ஆனது முதலில் பிரெஞ்சு மொழியில் வெளியிடப் பட்டது.
- டெல்லியானது கான்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் இந்திய வானிலை ஆய்வுத் துறை ஆகியவற்றுடன் இணைந்து மேக விதைப்புத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அதன் முதல் செயற்கை மழை தோற்றுவிப்பு சோதனைத் திட்டத்தைத் தொடங்க உள்ளது.
- இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவு (IFFCO) அமைப்பானது, பிரேசிலில் அதன் முதல் வெளிநாட்டு நுண் உர ஆலையை அமைத்து வருகிறது.
- 2024 ஆம் ஆண்டில், காற்றாலை மற்றும் சூரிய ஆற்றல் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதில் ஜெர்மனியைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா உலகின் மூன்றாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளது.
- இந்தியப் பிரதமரின் குரோயேஷியா பயணம் ஆனது, 1992 ஆம் ஆண்டில் இந்திய நாட்டுடனான அந்நாட்டின் அரசு முறை உறவுகள் நிறுவப்பட்டதிலிருந்து அந்நாட்டிற்கு பயணம் மேற்கொண்ட முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றதுடன் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தருணமாக அமைந்தது.
- நிப்பான் கோய் நிறுவனத்தில், இந்தியாவின் முதல் இந்திய நிர்வாக இயக்குநராக G. சம்பத் குமார் நியமிக்கப்பட்டார்.
- முதன்முறையாக, பீகாரில் கட்டமைக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப இரயில் என்ஜின் (இயந்திரம்) ஆனது மேற்கு ஆப்பிரிக்க நாடான நியூ கினியாவிற்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது.
- ஜப்பானின் இரண்டாவது மிகப்பெரிய மகிழுந்து தயாரிப்பு நிறுவனமான ஹோண்டா, நிறுவனம் மீண்டும் பயன்படுத்தக் கூடிய ஒரு சோதனை ஏவுகலத்தை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்


## கடலூர் மாவட்டத்தில் பாதரச மாசுபாடு

- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) ஆனது, நான்கு பேர் கொண்ட ஒரு தொழில்நுட்ப நிபுணர் குழுவை அமைத்துள்ளது.
- கடலூர் மாவட்டத்தில் உள்ள நெய்வேலி மற்றும் பரங்கிப்பேட்டையில் நிலத்தடி நீர் மாதிரிகளில் கண்டறியப்பட்ட பாதரச மாசுபாட்டின் மூலத்தைக் கண்டறிய, நீர் மற்றும் மண் மாதிரிகளை மிக விரிவான முறையில் ஆய்வு செய்து பகுப்பாய்வு செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ நெய்வேலி மற்றும் பரங்கிப்பேட்டையில் உள்ள சில இடங்களில் இப்பாதரசத்தின் அளவு சுமார் 0.0001 மி.கி/லிட்டர் என்ற அனுமதிக்கப்பட்ட வரம்பைத் தாண்டியதாக முந்தைய அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.




## தமிழ்நாடு பொருளாதாரப் புள்ளிவிவரங்கள் 2025




❖ திமுக அரசாங்கமானது கடந்த ஆண்டில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களுக்கு 6,626 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

❖ இதற்கு முந்தையதாக, அதிமுக ஆட்சியின் 10 ஆண்டுகளில், இந்தத் துறைக்கு ஒதுக்கப் பட்ட 3,617.62 கோடி ரூபாய் நிதியை விட இது கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமாகும்.

❖ தமிழ்நாட்டின் பெரும் பொருளாதாரத்திற்கு சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களின் பங்களிப்பை நன்கு கருத்தில் கொண்டு, இந்த நிதியாண்டில் இந்தத் துறைக்கு 1,918.22 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


❖ சுமார் 35 லட்சத்திற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட சிறு, குறு மற்றும் நடுத்தரத்

தொழில்துறை நிறுவனங்களுடன் தமிழ்நாடு மாநிலமானது இந்தியாவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

- மகாராஷ்டிரா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை தமிழ்நாட்டை விட முன்னணியில் உள்ளன.
- இது 2.47 கோடி மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.
- தமிழ்நாடு 30.50 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஏற்றுமதியுடன் இந்தியாவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- உற்பத்தித் துறையில், இந்தியாவின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 11.90% ஆகும்.
- தற்போதைய அரசு 14 தொழிற்துறைப் பூங்காக்களை உருவாக்கியுள்ளது.
- மோட்டார் வாகனங்கள், ஆயத்த ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- ஜவுளி உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் மின்னணுப் பொருட்கள் உற்பத்தியில் தமிழ் நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் உள்ள சுமார் 14.9 லட்சம் பெண் தொழிலாளர்களில், தமிழ்நாட்டில் மட்டும் 6.3 லட்சம் பெண்கள் தொழிலாளர் வளத்தில் உள்ளனர்.
- இது மொத்தப் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் சுமார் 42% ஆகும் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தொழில்முனைவோரில் 30% பெண்கள் ஆவர்.

# தேசியச் செய்திகள்

## மதிப்பீட்டுக் குழுவின் 75 ஆம் ஆண்டு நிறைவு





- மும்பையில் தேசிய மதிப்பீட்டுக் குழுக்களின் மாநாட்டை மக்களவை சபாநாயகர் தொடங்கி வைத்தார்.
- இது பாராளுமன்ற மதிப்பீட்டுக் குழுவின் 75 ஆம் ஆண்டு நிறைவினை நினைவு கூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- 1950 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் தேதியன்று இந்தக் குழு நிறுவப் பட்டது.
- இந்தியாவின் பாராளுமன்ற அமைப்பில் கடுமையான நிதி மேற்பார்வையை உறுதி

செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது அரசாங்கச் செலவினங்கள், மதிப்பீடுகளை நன்கு ஆராய்ந்து நிர்வாகத் திறன், பொருளாதாரம் மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துகிறது.

## 'பிரதிபா சேது' இணைய தளம்




- பிரதிபா சேது என்பது ஒன்றியக் குடிமைப் பணியாளர் ஆணையத்தினால் (UPSC) தொடங்கப் பட்ட ஒரு மையப்படுத்தப்பட்ட எண்ணிம தளமாகும்.
- பிரதிபா சேது என்பது 'தொழில்முறை வளம் மற்றும் திறமை ஒருங்கிணைப்பு – அரசுப் பணி ஆர்வலர்களை பணியமர்த்தச் செய்வதற்கான இணைப்புப் பாதை' என்பதைக் குறிக்கிறது.
- இது 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அதிகாரப் பூர்வமாக தொடங்கப்பட்டது.
- தகுதி வாய்ந்த ஆனால் பணிக்குப் பரிந்துரைக்கப்படாத தேர்வர்களின் தனிப்பட்ட சுய விவரங்களைப் பகிர்ந்து கொள்வதை மிகவும் எளிதாக்குவதன் மூலம் திறமைக்கும் வாய்ப்புக்கும் இடையிலான ஒரு இடைவெளியைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தேர்வர் சுயவிவரங்கள் ஆனது அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் முதலாளிகளுக்கு சாத்தியமான பணிச் சேர்ப்புக்காக என அணுகக் கூடியதாக மாற்றப்பட்டுள்ளன.
- பிரதிபா சேது என்பது முந்தையப் பொதுத் தகவல் வெளிப்படுத்தல் திட்டத்தின் (PDS) மறுபெயரிடப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட வடிவமாகும்.
- பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் (DoPT) முடிவைத் தொடர்ந்து PDS ஆனது 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- அந்தத் திட்டத்தின் கீழ் UPSC பரிந்துரைக்கப்படாத ஆனால் விருப்பத்தைக் கொண்டு உள்ள தேர்வர்களின் சுய விவரங்களைப் பொது வெளியில் பகிரத் தொடங்கியது.

- இப்புதிய தளம் ஆனது, CSE தேர்வு நிலைகளில் தேர்ச்சி பெற்றாலும் இறுதிப் பட்டியலில் இடம் பெறாத தேர்வர்களுக்கு நவீன திறமை ஒருங்கிணைப்புப் பாலமாக செயல்படும்.


# சர்வதேசச் செய்திகள்

## உதவியுடன் கூடிய மரணம் குறித்த மசோதா 2025 – ஐக்கியப் பேரரசு

- மரணமடையும் நிலையில் உள்ளவர்கள் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ள அனுமதிக்கும் மசோதாவை ஐக்கியப் பேரரசின் மக்கள் மன்றம் நிறைவேற்றியது.
- மரணமடையும் நிலையில் உள்ள பெரியவர்கள் (தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்வதற்கான) மசோதா, பேச்சுவழக்கில் உதவியுடன் கூடிய மரண மசோதா என்று அழைக்கப்படுகிறது.
- இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் ஆறு மாதங்களுக்கும் குறைவாகவே வாழ்வதற்கான வாய்ப்புள்ள மக்களுக்கு மட்டுமே இது பொருந்தும்.




## சியோஸ் காட்டுத்தீ 2025




- சியோஸ் எனும் கிரேக்கத் தீவில் ஒரு பெரிய காட்டுத்தீ பரவியுள்ளது.
- கோஃபினாஸ், அகியா அன்னா மற்றும் அகியஸ் மகாரியோஸ் ஆகியப் பகுதிகளில்

மூன்று காட்டுத் தீ ஏற்பட்டது.

- சியோஸ் ஆனது கிழக்கு ஏஜியனில் அமைந்துள்ளது.
- கிரேக்கத்தின் வெப்பமான, வறண்ட கோடைகாலத்தில் இந்தப் பகுதியில் காட்டுத்தீ ஏற்பட வாய்ப்புள்ளது.

### புதிய முத்தரப்பு பேச்சுவார்த்தை 2025

- சீனா, பாகிஸ்தான் மற்றும் வங்காள தேசம் ஆகிய நாடுகள் சீனாவின் யுன்னான் மாகாணத்தின் தலைநகரான குன்மிங்கில் முதல் முத்தரப்புக் கூட்டத்தை நடத்தின.
- இது சீனாவின் இரண்டாவது சமீபத்திய முத்தரப்பு முன்னெடுப்பாகும்.
- கடந்த மாதம் சீனா, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானுடன் இதே போன்ற பேச்சு வார்த்தை நடைபெற்றது.
- இம்மூன்று நாடுகளும் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தி பல்வேறு உத்திசார் மற்றும் மேம்பாட்டுப் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்தன.





## பொருளாதாரச் செய்திகள்


### இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய நிதித் திட்ட விதிகள் 2025

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது, NBFC துறைக்கு ஒழுங்குமுறை தெளிவை வழங்கச் செய்கின்ற நிதி வழங்கீடுத் திட்டம் குறித்த இறுதி வழிகாட்டுதல்களை வெளியிட்டு உள்ளது.
- இந்த விதிமுறைகள் ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பிறகு அனுமதிக்கப்பட்ட கடன்களுக்குப் பொருந்தும்.
- இந்தத் திட்டத்தின் இறுதி வடிவமானது கடன் வழங்கல் தேவைகளை எளிதாக்குகிறது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, அனைத்து ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களிலும் தரப் படுத்தப் பட்ட வழிகாட்டுதல்களுடன், கொள்கை அடிப்படையிலான முக்கியத் தீர்வு அணுகுமுறையை ஏற்றுக்கொண்டுள்ளது.
- இதில் செயல்பாட்டில் உள்ள திட்டங்களுக்கான புதிய கடன்களுக்கான நிலையான நிதி ஒதுக்கீடு 1% ஆகவும், வணிக ரீதியான வீட்டு மனை விற்பனைத் திட்டங்களுக்கு 1.25% ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- இது ஆரம்பத்தில் முன்மொழியப்பட்ட 5 சதவீதத்தினை விட மிகக் குறைவாகும்.





## உலகின் இரண்டாவது பெரிய செலாவணி இருப்பு




- தங்கம் ஆனது யூரோவை முந்தி உலகின் இரண்டாவது பெரிய அந்நியச் செலாவணி இருப்பு சொத்தாக மாறியுள்ளது.
- தங்கம் தற்போது உலகளாவிய இருப்புகளில் சுமார் 20% பங்கினைக் கொண்டுள்ளது என்பதோடு இது யூரோவின் 16 சதவீதப் பங்கினை விட அதிகமாக உள்ளது.
- அமெரிக்க டாலர் ஆனது அதிகப் பங்கினைக் கொண்ட பண மதிப்பு சார் இருப்பாக தொடர்ந்து உள்ளது.
- இது உலகளாவிய இருப்புகளில் 46% பங்கினைக் கொண்டுள்ளது.
- மத்திய வங்கிகள் ஆனது, கடந்த மூன்று ஆண்டுகளாக ஆண்டுதோறும் சுமார் 1,000 டன்களுக்கு மேலான கொள்முதலுடன் சமீபத்திய ஆண்டுகளில் தங்கக் கொள்முதலை கணிசமாக அதிகரித்துள்ளன.

- ❖ இது முந்தையப் பத்தாண்டுகளின் 400–500 டன்கள் என்ற ஒரு சராசரியை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.
- ❖ உலகளாவிய அதிகாரப்பூர்வத் தங்க இருப்பு 36,000 டன்களை எட்டியுள்ளது.
- ❖ இது 1965 ஆம் ஆண்டு பிரெட்டன் வூட்ஸ் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட 38,000 டன்கள் என்ற வரலாற்று உச்சத்தை நெருங்கி வருகிறது.
- ❖ உலக தங்கச் சபையின் தரவுகளின் படி, 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப் படி இந்திய ரிசர்வ் வங்கியானது 876.18 டன் தங்க இருப்பைக் கொண்டிருந்தது.

## இந்தியாவின் காபி ஏற்றுமதி





- ❖ கடந்த 11 ஆண்டுகளில் இந்தியாவின் காபி ஏற்றுமதி 125% அதிகரித்துள்ளது.
- ❖ தற்போது 2023–24 ஆம் ஆண்டில் இது 1.8 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.
- ❖ இது 2014–15 ஆம் ஆண்டில் 800 மில்லியன் டாலர்களிலிருந்து உயர்ந்துள்ளது.
- ❖ இது இந்தியாவின் நிலையை உலகளவில் 5வது மிகப் பெரிய காபி ஏற்றுமதியாளராக உயர்த்தியது.
- ❖ இந்தியா தற்போது 7வது பெரிய காபி உற்பத்தியாளராக உள்ளது.
- ❖ இந்தியா அதன் வருடாந்திர உற்பத்தியான 3.5 லட்சம் டன்களை விட மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலாக ஏற்றுமதி செய்கிறது.
- ❖ இந்தியாவின் காபி வகையில் சுமார் 75% ஆனது முதன்மையாக மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளில் வளர்க்கப்படுகின்ற அரபிகா மற்றும் ரோபஸ்டா என்ற காப்பி கொட்டை வகைகள் ஆகும்.
- ❖ 2022–23 ஆம் ஆண்டில் 248,020 மெட்ரிக் டன்களுடன் கர்நாடகா தேசிய உற்பத்தியில் முன்னணியில் உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் உள்ளன.

- ரஷ்யா, ஐக்கிய அரபு அமீரகம், அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இணைந்து இத்தாலி, ஜெர்மனி, பெல்ஜியம் உள்ளிட்ட சில முக்கியச் சந்தைகளுடன் ஐரோப்பா தொடர்ந்து முன்னணி ஏற்றுமதி இடமாக உள்ளது
- உலகளவில் முன்னணித்துவத்தினைத் தக்க வைத்து பிரேசில் உலகின் மிகப்பெரிய காபி உற்பத்தியாளராகத் தொடர்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## வாயேஜர் 1 – நெருப்புக் கவசம்





- வாயேஜர் 1 விண்கலமானது, நமது சூரிய மண்டலத்தின் விளிம்பில் "நெருப்புக் கவசம்" என்று அழைக்கப்படும் ஒரு பகுதியில் நுழைந்துள்ளது.
- "நெருப்புக் கவசம்" என்பது சூரிய மண்டலத்தின் வெளிப்புற விளிம்புப் பகுதிக்கு (ஹீலியோபாஸ்) அருகில் அமைந்துள்ள அதி வெப்பமான பிளாஸ்மாவின் மெல்லியப் படலம் ஆகும்.
- இந்த மண்டலத்தில் வெப்பநிலை 30,000 முதல் 50,000 கெல்வின் (தோராயமாக 90,000°F) வரை இருக்கும்.


## குவாடா நெகட்டிவ் இரத்தக் குழு

- பிரான்சு நாடானது முற்றிலும் புதிய இரத்தக் குழு அமைப்பை அடையாளம் கண்டு உள்ளது.
- இது தற்போது சர்வதேச இரத்தப் பரிமாற்றச் சங்கத்தால் (ISBT) மிக அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- EMM-எதிர்மறை என்று பெயரிடப்பட்ட இந்த குழு, பேச்சுவழக்கில் "குவாடா நெகட்டிவ்" என்று அழைக்கப்படுகிறது.
- புதிதாக வகைப்படுத்தப்பட்ட இந்த இரத்தக் குழு அமைப்பானது, ISBT சங்கத்தினால் அதிகாரப்பூர்வமாக ISBT042 என பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இது EMM ஆன்டிஜென் இல்லாத வகையாக வரையறுக்கப்படுகிறது.

- EMM ஆன்டிஜென் ஆனது பொதுவாக சிவப்பு இரத்த அணுக்களில் காணப்படுகிறது மற்றும் இது மிகவும் அதிக எண்ணிக்கையில் காணப்படும் ஆன்டிஜென் என்று கருதப் படுகிறது.




## ஸ்கல்ப்டர் அண்டத்தின் மிக விரிவான வரைபடம்




- ஐரோப்பியத் தெற்கு ஆய்வகத்தில் (ESO) உள்ள வானியலாளர்கள் இந்த அண்டத்தின் விரிவான வரைபடத்தை உருவாக்கினர்.
- இது 65,000 ஒளி ஆண்டுகள் தொலைவு வரை பரவியுள்ளது.
- ஸ்கல்ப்டர் அண்டமானது NGC 253 என்றும் அழைக்கப்படுகிறது.
- இது பூமியிலிருந்து புலப்படும் வகையிலான பிரகாசமான மற்றும் தூசி நிறைந்த சுழல் அண்டங்களில் ஒன்றாகும்.
- இது ஸ்கல்ப்டர் விண்மீன் திரளில் சுமார் 11 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில்

அமைந்துள்ளது.

- இது வெள்ளி நாணயம் அல்லது வெள்ளி டாலர் அண்டம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்த NGC 253 என்பது தற்போது தீவிர நட்சத்திர உருவாக்கத்தில் உள்ள ஒரு நட்சத்திர வெடிப்பு அண்டமாகும்.
- இப்புதிய தரவுகள் ஸ்கல்ப்டர் அண்டத்திற்குள் முன்னர் அறியப்படாத சுமார் 500 கிரக விண் முகிற் படலங்களை (நெபுலா) கண்டறிய வழிவகுத்தன.
- ஸ்கல்ப்டர் அண்டமானது நமது சொந்தப் பால் வெளி அண்டத்துடன் பல கட்டமைப்பு மற்றும் அளவு சார் ஒற்றுமைகளைக் கொண்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## PTR வளங்காப்பகத்தில் ஊர்வன இனங்களின் கணக்கெடுப்பு





- பெரியார் புலிகள் வளங்காப்பகத்தில் (PTR) சமீபத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் ஐந்து புதிய நீர் நில வாழினங்கள் மற்றும் மூன்று புதிய ஊர்வன இனங்கள் இந்தப் பகுதியின் பதிவுகளில் சேர்க்கப் பட்டுள்ளன.
- மொத்தம் 67 நீர் நில வாழ் இனங்கள் மற்றும் 82 ஊர்வன இனங்கள் கணக்கெடுப்பின் போது ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
- 67 இனங்களில் 53 (சுமார் 80%) மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டுமே காணப் படுவதுடன், நீர் நில வாழ் இனங்களின் பன்முகத் தன்மை குறிப்பிடத்தக்கது.
- ஊர்வனவற்றில், 12 இனங்கள் அருகி வரும் இனங்களின் பட்டியலில் உள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக முதலீட்டு அறிக்கை 2025

- 2025 ஆம் ஆண்டிற்கான உலக முதலீட்டு அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாடு தொடர்பான மாநாட்டு அமைப்பானது (UNCTAD) தற்போது வெளியிட்டுள்ளது.
- உலகளாவிய அந்நிய நேரடி முதலீடானது (FDI) 2024 ஆம் நடப்பு ஆண்டில் 11% குறைந்து 1.5 டிரில்லியன் டாலராக இருந்தது.

- இது இரட்டை இலக்க வீழ்ச்சி பதிவான இரண்டாவது தொடர்ச்சியானதொரு ஆண்டைக் குறிக்கிறது.
- சர்வதேச திட்ட நிதி ஒப்பந்தங்கள் 27% சரிந்தன.
- வளர்ந்து வரும் ஆசியாவிற்கான அந்நிய நேரடி முதலீடானது 2024 ஆம் ஆண்டில் 3% சரிந்தது.
- முதலீட்டு வரவு 29% சரிந்ததுடன் மிகக் கடுமையான வீழ்ச்சியை சீனா எதிர்கொண்டது என்பதுடன் இந்தியாவின் முதலீட்டு வரவில் 2% சிறு சரிவு எனபது பதிவானது.
- ASEAN கூட்டமைப்பு நாடுகள் அந்நிய நேரடி முதலீட்டில் சுமார் 225 பில்லியன் டாலர் மதிப்பிலான முதலீட்டினை ஈர்த்தது என்பதோடு. இது ஆண்டிற்கு 10% அதிகரித்துள்ளது.
- உள்கட்டமைப்பு முதலீடுகள் சுமார் 35% அளவிற்குச்சரிந்தன என்பதோடு, புதுப்பிக்கத் தக்க எரிசக்தி 31% சரிந்தது, மற்றும் நீர், துப்புரவு மற்றும் சுகாதாரத்திற்கான செலவு 30% குறைந்தது.
- வேளாண் சார் உணவு முதலீடுகள் 19% குறைந்துள்ளன.
- சுகாதாரம் மற்றும் கல்வியில் மட்டுமே 25% அதிகரிப்புடன் இந்தப் போக்கிற்கு மாறான முதலீடுகள் பதிவாகியுள்ளன.





## உலகளாவிய வறட்சி குறித்த கண்ணோட்ட அறிக்கை 2025

- 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய வறட்சி குறித்த கண்ணோட்ட அறிக்கையானது சமீபத்தில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (OECD) வெளியிடப் பட்டது.
- வறட்சியின் தீவிரத்தால் அதிகம் பாதிக்கப்படும் OECD நாடுகளில் ஸ்பெயின் நாடும் ஒன்றாக உள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் வறட்சியின் சராசரி பொருளாதாரத் தாக்கம் ஆனது, ஏற்கனவே 2000

ஆம் ஆண்டில் இருந்ததை விடக் குறைந்தது இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது.

- இது 2035 ஆம் ஆண்டளவில் மேலும் 35% அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- பேரிடர் தொடர்பான உயிரிழப்புகளில் 34% வறட்சி காரணமாக ஏற்படுகிறது.




## ஆயுத மோதலில் குழந்தைகளின் நிலை குறித்த வருடாந்திர அறிக்கை 2025




- கடந்த ஆண்டில், குழந்தைகளுக்கு எதிரான 41,370 கடுமையான வன்முறைகள் ஐக்கிய நாடுகள் சபையால் ஆவணப்படுத்தப்பட்டு சரி பார்க்கப் பட்டன.

- இது 2023 ஆம் ஆண்டிலில் பதிவான 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு எதிரான "மிக கடுமையான வன்முறைகளை" விட 25% அதிகரிப்பைக் காட்டுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையானது ஆயுத மோதலில் குழந்தைகளுக்கு எதிரான பல்வேறு துஷ்பிரயோகங்களை மேற்கொள்ளச் செய்யும் நாடுகளைக் கொண்ட அதன் "கருப்புப் பட்டியலில்" தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இஸ்ரேலை சேர்த்துள்ளது.
- இது ரஷ்ய ஆயுதப் படைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆயுதக் குழுக்களை மூன்றாவது ஆண்டாக அதன் கருப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையானது மிக முதல் முறையாக விவ் அன்சான்ம் கூட்டணி என்று அழைக்கப் படும் ஹைத்தியில் உள்ள ஒரு குழுவினை கருப்புப் பட்டியலில் சேர்த்தது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


## சாகித்ய அகாடமி விருதுகள் 2025




- சாகித்ய அகாடமியானது, 23 எழுத்தாளர்களை 'யுவ புரஸ்கார்' என்ற விருதிற்கும், 24 எழுத்தாளர்களை 'பால் புரஸ்கார்' விருதுகளுக்கும் தேர்ந்தெடுத்துள்ளது.
- யுவ புரஸ்கார் விருதானது 23 மொழிகளுக்கு வழங்கப் படுகிறது.
- விருது பெற்றவர்களில் ஆங்கில மொழிப் பிரிவில் அத்வைத் கோட்டாரி, இந்தி மொழிப் பிரிவில் பார்வதி திர்கே, தமிழ் மொழிப் பிரிவில் லட்சுமிஹார் மற்றும் தெலுங்கு மொழிப் பிரிவில் பிரசாத் சூரி ஆகியோர் அடங்குவர்.
- இந்த ஆண்டு டோக்ரி மொழிப் பிரிவில் யுவ புரஸ்கார் விருது வழங்கப்படவில்லை.
- விருது வென்ற மற்ற வெற்றியாளர்களில் அசாமிய மொழிப் பிரிவில் சுப்ரகாஷ் புயான், வங்காள மொழிப் பிரிவில் சுதேஷ்னா மொய்த்ரா, கன்னட மொழிப் பிரிவில் R.திலீப் குமார் மற்றும் மலையாள மொழிப் பிரிவில் அகில் P. தர்மஜன் ஆகியோர் அடங்குவர்.
- சாகித்ய அகாடமியானது தனது பால சாகித்ய புரஸ்கார் விருதுக்கு வேண்டி 24 நூலாசிரியர்களின் பெயர்ப் பட்டியலை அறிவித்துள்ளது.
- மலையாள மொழிப் பிரிவில் ஸ்ரீஜித் மூத்தேடத், தமிழ் மொழிப் பிரிவில் விஷ்ணுபுரம் சரவணன், தெலுங்கு மொழிப் பிரிவில் கங்கிசெட்டி சிவக்குமார் ஆகியோர் விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- ஆங்கில மொழி உட்பட 24 இந்திய மொழிகளில் பெரும் இலக்கியச் செயல்பாடுகளை

மேற்கொள்ளும் ஒரே நிறுவனம் சாகித்ய அகாடமி மட்டுமே ஆகும்.

## மாருதி சித்தம்பள்ளி




- பிரபல சுற்றுச்சூழல் ஆர்வலர், வனவிலங்கு வல்லுநர் மற்றும் பத்மஸ்ரீ விருது பெற்ற மகாராஷ்டிரா மாநிலத்தின் மாருதி சித்தம்பள்ளி காலமானார்.
- அவர் 'ஆரண்ய ரிஷி' என்றும் அன்புடன் அழைக்கப்படுகிறார்.
- 13 மொழிகளில் சரளமாகப் பேசும் திறன் பெற்ற அவர், பழங்குடியினச் சமூகங்களுடன் ஈடுபட்டு, வளமிக்கச் சூழலிய மற்றும் சுற்றுச்சூழல் தரவுகளைச் சேகரிக்கவும் தனது மொழியியல் திறமையைப் பயன்படுத்தினார்.
- அவரது நாட்குறிப்புகள் பின்வரும் அறிவியல் படைப்புகளுக்குப் பெரும் அடித்தளமாக அமைந்தன:
    - ‘பக்சிகோஷா’ (பறவைகளின் தகவல் களஞ்சியம்),
    - ‘பசுகோஷா’ (விலங்குகளின் தகவல் களஞ்சியம்), மற்றும்
    - ‘மத்ஸ்யகோஷா’ (மீன்களின் தகவல் களஞ்சியம்)

# விளையாட்டுச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டி உருவச் சின்னம்

- 2025 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் புது டெல்லியில் நடைபெற உள்ளன.
- இப் போட்டியில் சுமார் 100க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதுடன், இந்தியாவில் இதுவரையில் நடத்தப் பட்ட மிகப்பெரிய மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டிகளாகும்.
- ஒரு செயற்கை எலும்பு உறுப்புடன் கூடிய துடிப்பான குட்டி யானையைச் சித்தரிக்கும் வகையிலான, விராஜ் என்று பெயரிடப்பட்ட அதிகாரப்பூர்வ உருவச் சின்னம் ஆனது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களின் உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில்

விராஜ் ஆனது வலிமை, மீள்தன்மை மற்றும் நம்பிக்கையை குறிக்கிறது.




# இதரச் செய்திகள்

## அச்சிடப்பட்ட முதல் சமஸ்கிருத இலக்கணம்

- குரோஷிய நாட்டின் பிரதமர் ஆண்ட்ரேஜ் பிளென்கோவிச்சிடமிருந்து இந்தியப் பிரதமர் வெஸ்டினின் சமஸ்கிருத இலக்கணத்தின் மறுபதிப்பைப் பெற்றார்.
- 1790 ஆம் ஆண்டு குரோஷியாவின் அறிவியல் ஆய்வாளரும் சமயப் பரப்பாளருமான பிலிப் வெஸ்டின் (1748-1806) என்பவரால் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஒரு சமஸ்கிருத இலக்கணம் ஆனது இலத்தீன் மொழியில் எழுதப்பட்டது.
- 1774 ஆம் ஆண்டில் மலபார் பகுதிக்கு ஒரு சமயப் பரப்பாளராக வருகை தந்த பிலிப் வெஸ்டின், பின்னர் மலபார் கடற்கரையில் கிறிஸ்துவ மதத்தின் ஒரு பிரதான குருவாக ஆனார்.
- 1790 ஆம் ஆண்டில், அச்சிடப்பட்ட முதல் சமஸ்கிருத இலக்கணத்தை வெளியிட்ட ஒரு பெருமை அவரையே சாரும்.
- அவரை நினைவு கூரும் வகையில் ஒரு நினைவுப் பதாகையானது 1999 ஆம் ஆண்டில் திருவனந்தபுரத்தில் திறக்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★